நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைப் பண்ணப்படும். ரோமர் 10:13 "ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்"

இந்த துண்டு பிரதியை வாசித்தபின் நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டால் எங்களுக்கு எழுதி தெரியப்படுத்துங்கள், அதனால் நாங்களும் உங் களுடனே சந்தோஷப்படுவோம்.

Hope tract ministry
All tracts are free, as the Lord provides
P.O. BOX 609 • YORK, SC 29745 • 803-684-1535
WWW.HOPETRACTS.ORG
No Escape (Tamil) Tract 541

# தப்ப முடியாது !!!



மனிதன் தப்ப முடியாத அநேக காரியங்கள் உள்ளன.

**வயதிற்கு நாம் தப்பமுடியாது:** சங்கீதம் 39:5 "இதோ, என் நாட்களை நாலு விரற்கடையளவாக்கினீர்; என் ஆயுசு உமது பார்வைக்கு இல்லாதது போலிருக்கிறது; எந்த மனுஷனும் மாயையே என்பது நிச்சயம்" என்றும் இளமையை தேடும் எல்லா மருத்துவர்கள், மருந்துகளும் ஒருநாள் நமது வயது நம்மை மரணத்திற்கு கொண்டு செல்லும் என்பதை மாற்றமுடியாது.

**நோய்களிலிருந்து நாம் தப்பமுடியாது:** பொதுவான ஜலதோஷத்தை எப்பொழுதும் குணப்படுத்த முடியாது. புற்றுநோய் மற்றும் இருதய சம்பந்தமான நோய் எங்கும் உள்ளன. கொடிய எய்ட்ஸ் வியாதி மிக வேகமாக பரவி வருகிறது. மேலும் உலகில் ஆங்காங்கே புதிய நோய்கள் பலரைத் தாக்குகிறது. இயேசு நம்மில் இல்லாவிட்டால் எந்த நோய்க்கும் தப்ப முடியாது.

**சமுதாயத்திற்கு நாம் தப்பமுடியாது:** காலம் செல்ல செல்ல வன்முறை மற்றும் தீவிரவாதத்தினால் சமுதாயம் மிகவும் மாறுகின்றது. வேதாகமம் II தீமோத்தேயு 3:1,2 ல் "மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தை யுள்ளவர்களாயும் தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்கு கீழ்ப் படியாதவர்களாயும், பரிசுத்த மில்லாதவர்களாயும்" என்று கூறப்பட்டுள்ளது.

**மரணத்திற்கு நாம் தப்ப முடியாது:** எங்கே போனாலும், என்ன செய்தாலும் மரணமே நம்முடைய முடிவு. நாம் அதிலிருந்து தப்பமுடியாது என்று நம் எல்லோருக்கும் தெரியும். அது உங்களுக்கு பரலோகமா அல்லது நரகமா? எபிரேயர் 9:27 "அன்றியும் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்பை அடைவதும் மனுஷனுக்கு நியமிக்கப் பட்டிருக்கிறபடியே".

**தேவன் இல்லாத மனிதன் நியாயத் தீர்ப்புக்கு தப்பமுடியாது:** எபிரேயர் 2:3 "முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும்", மனிதன் தேவனை மறுதலித்தால் ஆண்டவரின் நியாயத்தீர்ப்புக்கும் அதன் பின் கிடைக்கும் நரக தண்டனையிலிருந்தும் தப்ப முடியாது. வெளி 20:12 "மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின் படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்".

**வயது, நோய், சமுதாயம் மற்றும் மரணத்திற்கு தப்ப முடியாவிட்டாலும் நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும், அப்படியெனில் நாம் உண்மையாக தேவனின் நியாயத் தீர்ப்புக்கு தப்ப முடியும்:** நமக்காக கல்வாரியில் மரித்து நம்முடைய பாவத்திற்கான கடனை அடைத்தவராகிய இயேசு கிறிஸ்துவிடம் நாம் வந்தால் நாம் சுதந்தரமாவோம். யோவான் 3:16 "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" ரோமர் 6:23 "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்". ரோமர் 10:9:10 "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.